கலைஞரின்

பொன்விழாப் பொழிவு



கலைஞரின்

பொன்விழாப் பொழிவு

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
உண்ணா அறிவாலயம்

தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

முதற்பதிப்பு : மே 2007

26582

விலை ரூ. 3/-


அச்சிட்டோர் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.

இந்நூல். . . .

ஓய்வறியா உழைப்பாளி, ஒப்பற்ற உயர் தலைவர், முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே இதுவரையில் எவரும் சாதிக்க முடியாத சாதனையாக சட்டப்பேரவையில் 50 ஆண்டுகாலமாக பணியாற்றியதோடு, போட்டியிட்ட தேர்தல்களில் வெற்றி பெற்றதைப் பாராட்டும் வகையில் 11.5.2007 அன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற "சட்டப் பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில் சட்டமன்ற கட்சித் தலைவர்களும், தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும் கலந்து கொண்ட விழாவிலும், அன்று மாலை சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் மாண்புமிகு மன்மோகன் சிங், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவரும்

ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவருமான அன்னை திருமதி, சோனியா காந்தி அவர்களும் மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலும், 12.5.2007 அன்று மக்களவைத் தலைவர் மாண்புமிகு சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் சட்டப் பேரவையில் பங்கேற்று சட்டமன்றப் பணிகளை பாராட்டிய வகையிலும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சட்டப் பேரவையில் பொன்விழா கண்ட தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஏற்புரைகளையும் 14.5.2007 அன்று சட்டப் பேரவையில் தலைவர் கலைஞர் அவர்கள் முல்லைப் பெரியாறு, காவேரி, பாலாறு பிரச்சினை குறித்து ஆற்றிய உரைகளையும் தொகுத்து "பொன்விழாப் பொழிவு" என்ற தலைப்பில் பெருமையுடன் இந்நூல் வெளியிடப்படுகிறது,

விழாக்குழுவினர்



தி.மு.க. அறக்கட
பேராசிரிய
ஆய்வக
நிலைய
சென்ை
அண்ணா

அந்த நாள் ஞாபகம்

1

'சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா'வை யொட்டி சட்டப்பேரவையில் 11.5.2007 ஆளுநர் பர்னாலா, சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் முதல்வர் கலைஞரைப் பாராட்டி உரையாற்றினர்.

நிறைவாக ஏற்புரையாற்றினார் முதல்வர் கலைஞர் அவர்கள்.

"மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களே, அவை முன்னவரும் என்னுடைய அன்புக்குரியவருமான பேராசிரியர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே வாழ்த்துரை வழங்கிய; என்னை ஊக்கப் படுத்தியுள்ள, உற்சாகப்படுத்தியுள்ள, உணர்ச்சிவசப்படுத்தியுள்ள சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் சுதர்சனம் அவர்களே, கோ.க.மணி அவர்களே, கோவிந்தசாமி அவர்களே, சிவபுண்ணியம் அவர்களே, செல்வம் அவர்களே, வருகை தந்துள்ள நாடாளுமன்ற - சட்டப்பேரவை உறுப்பினர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர்களே, நண்பர்களே - இன்றைய தினம் இந்த அவையிலே என்னுடைய சட்டமன்றப் பணி 50வது ஆண்டு பொன்விழா என்ற பெயரால் என்னுடைய உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க, உணர்ச்சி வயப்படுகின்ற அளவிற்கு நம்முடைய ஆளுநர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், சட்டமன்ற கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றியிருக்கின்றீர்கள்.

ஒரு பக்கத்திலே கேட்டுக் கொண்டிருந்த கையொலி இன்று ஒரு சேர இரு புறத்திலும் கேட்டுக் கொண்டிருக்கிறது

அந்த உரையை வரவேற்று எழுப்பிய கையொலி இத்தனை காலம் ஒருபக்கத்திலே கேட்டுக் கொண்டிருந்த கையொலி இன்று ஒருசேர இருபுறத்திலும் கேட்டு (மேசையைத்

தட்டும் ஒலி) இப்படியே எல்லா நாளும் இருக்கக்கூடாதா என்ற ஏக்கப் பெருமூச்சை எனக்கு வரவைக்கின்ற அளவுக்கு இருந்தது என்பதை நான் மறக்க முடியாது. நம்முடைய நண்பர் கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது, எண். 11 என்பதை குறிப்பிட்டு 11ஆம் தேதிதான் இந்த ஆட்சிக்கான அறிகுறி தோன்றி தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது என்று தேதி 11ஐ குறிப்பிட்டார். இன்றைக்கு இந்த விழா நடைபெறுகிற நாளும் 11 என்று குறிப்பிட்டார். 11 அதோடு முற்றுப்பெறவில்லை. இந்த அவையிலே உள்ள கட்சிகளினுடைய மொத்த எண்ணிக்கையும் 11 தான். (மேசையைத் தட்டும் ஒலி). தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., சி.பி.எம்., சி.பி.ஐ., ம.தி.மு.க. (வராவிட்டாலும் பெயரைக் குறிப்பிடுவது நல்லதல்லவா), விடுதலைச் சிறுத்தைகள், தே.மு.தி.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புரட்சி பாரதம் ஆகிய 11 கட்சிகள் இந்த அவையிலே இடம் பெற்றுள்ள கட்சிகள் ஆகும். அதுவும் 11 தான்.

1967 ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சி அமைப்பதற்கு தேர்தல் நிதி திரட்டியபோது கிடைத்த தொகையும் 11 லட்சம்தான். அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் சைதாப்பேட்டை தொகுதியிலே நிற்கப்போவது யார் தெரியுமா "மிஸ்டர் 11 லட்சம்" என்று குறிப்பிட்டதும் என்னைத் தான். அந்த "11 லட்சம்" இப்போது உங்களுக்கு நன்றி கூறப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருப்பேன் என்பது உங்களுக் கெல்லாம் தெரியும். ஏனென்றால் 50 ஆண்டுகால சட்டமன்ற மரபில் இந்த மண்டபத்தை 50 ஆண்டு காலமாக பார்த்துக் கொண்டிருக்கிற நான் பழைய நினைவுகளையெல்லாம் சேகரிக்கிறேன் நினைவில். அப்படி சேகரிக்கும்போது எனக்கு இங்கே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராஜர் தெரிகிறார், அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த பெரியவர் பக்தவத்சலம் தெரிகிறார், வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என் ஆசான் அறிஞர் அண்ணா தெரிகிறார், அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர் தெரிகிறார், அவரை ஆரத்தழுவி அன்பை பரிமாறிக்கொண்டு இங்கே பேசுகின்றேன்.

எத்தனையோ பெரியவர்கள், தலைவர்கள் அலங்கரித்த இடம் இந்த இடம். நான் சிலருடைய பெயரை இங்கே

குறிப்பிடாததுகூட நேரம் இல்லாத காரணமேதவிர வேறு அல்ல. அவர்களுக்கெல்லாம் நான் வணக்கம் செலுத்தி, தொடர்ந்து இந்த அவையில் ஜனநாயகத்தை காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பை ஏற்க இந்த நாளை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கே நான் என் எதிரிலே இருக்கின்ற வள்ளுவரின் படத்தைப் பார்க்கின்றேன். பக்தவத்சலத்தினுடைய நினைவு எனக்கு வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையிலே எதிர்க்கட்சி துணைத் தலைவராக இருந்தபோது, நான் இந்தப் படம் மயிலாப்பூரிலே முதல் முதலாக வரையப்பட்டு அதை வரைந்த நண்பர் வேணுகோபால் சர்மா, இந்தப் படத்தை அரசின் சார்பிலே நீங்கள் வெளியிடலாம் என்று என்னிடத்திலே சொன்னார். அந்தப் படத்தை அறிஞர் அண்ணா வந்து பார்த்தார், பெரியவர் பக்தவத்சலம் பார்த்தார், நாவலர் நெடுஞ்செழியன் பார்த்தார், நம்முடைய பேராசிரியர் அன்பழகனார் பார்த்தார், நான் சென்று பார்த்தேன், புலவர் பெருமக்கள் எல்லாம் பார்த்தார்கள், அது அரசின் சார்பிலே வெளியிடப்பட்டால் இதுவரையிலே திருவள்ளுவருக்கென்று ஒரு உருவம் அறுதியிட்டு அடையாளமாக காட்டப்படாமல் இருக்கிற அந்த நிலையை மாற்றலாம் என்ற எண்ணத்தோடு சட்டமன்றத்திலே நான் ஒருநாள் எழுந்து இப்படி ஒரு படம் மைலாப்பூரிலே ஒரு அருமையான ஓவியரால் தீட்டப்பட்டிருக்கிறது, அந்தப் படத்தை இங்கே சட்டமன்றத்திலே வைப்பீர்களா என்று கேட்டேன். பெரியவர் பக்தவத்சலம் அப்போது வைக்கப்படும் என்றோ, முடியாது என்றோ சொல்லாமல் மிகத் தந்திரமாக, இந்தக் கேள்வியைக் கேட்ட சட்டமன்ற உறுப்பினர் அவருடைய செலவிலே அந்தப் படத்தை இங்கே வைப்பதாக இருந்தால் வைக்கப்படும் என்று சொன்னார்.

தயங்காமல் நான் மறுநாளே அதற்கு எவ்வளவு செலவாகும், நேற்று முதலமைச்சர் சொன்ன அந்த உறுதியை நான் காப்பாற்றுகிறேன் என்று கடிதம் எழுதினேன். இவன் வம்புக்காரனாக இருப்பான் போல இருக்கிறதே என்று கருதி, மறுநாள் பக்தவத்சலமே கருணாநிதி அந்தப் படத்தை இங்கே வைத்தான் என்று வந்துவிடக்கூடாது, காங்கிரஸ் ஆட்சியிலே ஆட்சிக்கு அந்த அவப்பெயர் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தால் அவரே இங்கே வேணுகோபால் சர்மா தீட்டிய அந்த வள்ளுவர் படம் கருணாநிதி அன்றைக்கு கேட்டுக்

கொண்டாரே அந்த அடிப்படையில் வைக்கப்படும் என்று சொன்னார். அவர் சொன்னபடியே அந்தப் படம் இங்கே வைக்கப்பட்டது. ஆகவே இங்கே வள்ளுவர் இருப்பதற்கு காரணம் என்னுடைய கேள்வியும், பெரியவர் பக்தவத்சலனார் அவர்களுடைய நல்ல தன்மையும்தான். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதற்குப் பிறகு இன்றைக்கு வள்ளுவர் எந்த அளவுக்கு தமிழகத்திலே பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறார், எந்த அளவுக்கு அவருடைய உருவங்கள் பரவியிருக்கின்றன, அவருடைய கருத்துக்கள் எந்த அளவுக்கு இப்பொழுது பரப்பப்படுகின்றன என்பதெல்லாம் உங்களுக்கு தெரியும். ஆகவே இந்த சட்டமன்றத்திலே வள்ளுவருடைய திருவுருவத்தைப் பார்த்தவுடன் எனக்கு வந்த நினைவை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே சொன்னேன்.

இங்கேதான் பெருந்தலைவர் காமராஜர் எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறார், அவர் அதிகம் பேசுவதில்லை, இன்னும் சொல்லப் போனால் பேசுவதேகூட இல்லை. அவருக்கு பதிலாக சி. சுப்ரமணியம் அவர்கள்தான் பேசுவார். அவர் பேசவேண்டிய கருத்துக்களை சி. சுப்ரமணியம், நிதியமைச்சர் அப்போது, அவர்தான் பேசுவார். ஒன்று இரண்டு கருத்துக்களை அவர் சொல்லி மற்றவர்கள் பேசுவார்கள். ஆனால், ஆட்சிச் சக்கரத்தை சுழற்றிக் கொண்டிருந்தவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நாடறியும், உலகறியும், நானிலமறியும்.

ஒருநாள் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எதிரே இருந்த எங்கள் பக்கமாக குனிந்து அருகில் வருமாறு கையசைத்தார். இப்பொழுது வரமுடியாது, அப்போது மேஜையிருந்த நிலையில் அண்ணாவும் நானும் குனிந்து என்ன என்று கேட்டோம். அப்பொழுது காமராசர், "கல்யாணசுந்தரம்தான் இங்கிலீஷ் வேண்டாம் என்று பேசுகிறார். நீங்களும் தலையாட்டு கிறீர்களே நியாயமா?'' என்றார் அவர் தமிழிலே.

"என்ன?" என்றார் அண்ணா.

"அவர் சொல்கிறாரே, இங்கிலீஸ் வேண்டாம், தமிழ்தான் முழுக்க முழுக்க இருக்க வேண்டும் என்கிறாரே. தமிழே முழுக்க இருந்தால் என்ன ஆகும். இப்பொழுது இங்கிலீஷ் இருக்கிற இடத்தில் இந்தி வந்து குந்திக்கும்னே" என்றார்.

"இவரை நாம் இந்தி ஆதரவாளர் என்று நினைத்தோமே" என்று அண்ணா என்னிடம் சொன்னார். காரில் போகும்போது முன்வரிசையில் அண்ணா; பின்வரிசையில் நான் உட்கார்ந்திருக் கிறேன். "கருணாநிதி, காமராசர் பேசுவதை புரிஞ்சிக்கிட்டியா?" என்று அண்ணா சொன்னார். என்னண்ணா என்றேன்.

"எவ்வளவு பெரிய தத்துவத்தை எவ்வளவு புரட்சிகரமாக ஒரு சாதாரண உதாரணமாகச் சொன்னார் பார்த்தியா!" என்றார்.

ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால் அங்கே தமிழ் வந்து கொஞ்சிவிளையாடாது. அங்கு இந்தி வந்து குந்திக் கொள்ளும் என்று சொன்னாரே அதுதான் காமராசர்; ஞாபகம் வைத்துக்கொள் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி.)

நான் பேசிய கன்னிப் பேச்சு

இந்த ஒரு ரகசியத்தை உணர்வதற்கு இந்த சபை எனக்கொரு காலத்திலே வாய்ப்பாக இருந்தது. நான் குளித்தலை தொகுதியில் வெற்றி பெற்று இங்கே முதன் முதலாக வந்து அமர்ந்தபோது 170வது இடமோ 171வது இடமோ தெரியவில்லை. இங்கேதான் அமர்ந்திருந்தேன். முன்வரிசையில் அண்ணா, வி. கே. ராமசாமி அவர்களெல்லாம் அமர்ந்திருந்தார்கள். நான் பேசிய முதல் கன்னிப்பேச்சு, என்னுடைய தொகுதியிலே உள்ள நங்கவரம் பண்ணையைப் பற்றியது. கையேருவாரம், மாட்டேருவாரம் என்று ஒருவர் பேசியது பற்றியது. உழவர்கள், அவர்களே ஏர் ஓட்டிக்கொண்டு சென்று, மாடும் ஓட்டிக் கொண்டுச் சென்று அவர்களே அங்கே பணியாற்றி அவர்களுக்கு உதவினால் அதற்கு பெயர் மாட்டேருவாரம். உழவர் மாத்திரம் அங்கேபோய் பண்ணையார் மாடும் கொடுத்து – ஏர் – கலப்பையும் கொடுத்து அங்கே உழுதால் அதற்கு பெயர் கையேருவாரம் – உழவன் வெறும் கையோடுதான் போகிறான். அதனால் அதற்கு கையேருவாரம். மாடும் மற்ற பொருட்களும் கொடுத்தால் அதற்குப்பெயர் மாட்டேருவாரம்.

இதில் கையேருவாரம் பெற்றுள்ள கூலி என்ன, மாட்டேரு வாரத்திற்கு உள்ள கூலி என்ன, அதற்குள்ள பெரிய வித்தியாசம் – இந்த வித்தியாசம் குறைக்கப்பட வேண்டும் என்பதற்காக போராட்டம் நடந்தது.

அப்போதும் நாங்களும் கம்யூனிஸ்டும் சேர்ந்துதான் நங்கவரத்தில் அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம். கேள்விப்பட்டிருக்கிறோம், நாடு பாதி, நங்கவரம் பாதி என்று அவ்வளவு பெரிய பண்ணை அது. அங்கே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். நாங்கள் சட்டமன்றத்திற்கு வருகின்ற நாள் அன்று காலையில் எனது வீட்டிலே எம். எல். ஏ. க்களுக்கெல்லாம் விருந்து. முதன் முதலாக சட்டமன்றத்திற்கு வரப்போகின்றோம். அதனால் வீட்டிலே விருந்து - அண்ணா இருக்கிறார், நாவலர் அப்போது சட்ட மன்றத்திற்கு வரமுடியவில்லை. காரணம் அவர் சேலத்தில் வெற்றிவாய்ப்பை இழந்துவிட்டார். நம்முடைய பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்.

எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது, நாவலர் என்னிடம் என்னய்யா கையேருவாரம், மாட்டேருவாரம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே, அது என்னவென்று கேட்டார். நான் அவரிடம் அதைப்பற்றி விளக்கிச் சொன்னேன். அவர் திரும்பத் திரும்ப அதைப் பற்றி விளக்கம் கேட்டபோது நான் சொல்லிக் கொண்டிருந்தேன். இதை அண்ணா அவர்கள் தொலைவிலிருந்தவாறு கவனித்துக்கொண்டிருந்தார். கவனித்து விட்டு, நாவலரை அழைத்து, "நெடுஞ்செழியன், உனக்கு கருணாநிதி விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளாதே, அவன் இன்றைக்கு பேசப் போகிறான், அதற்கு உன்னிடம் ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கிறான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னார்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், நீங்கள் அப்படி ஒத்திகை பார்த்துவிட்டு வந்து பேசவேண்டும். அதற்கு நானே உதாரணமாக அன்றைக்கு இருந்திருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் இதை நினைவூட்டினேன்.

ஒரு வேடிக்கையையும் சொல்ல வேண்டுமென்றால், அன்றைக்கு பேரவைத் தலைவராக யு. கிருஷ்ணாராவ் இருந்தார். அவருக்கு அவ்வளவாக தமிழ் வராது, மழலைக் குரலில் பேசுவார். ஆங்கிலத்திலே சரளமாகப் பேசுவார். பெரிய மனிதர், மேதை, மிகவும் நல்லவர். அண்ணாவிடமும் எங்களிடமும் மிக மிக அன்புகொண்டவர். ஒருநாள் சேலம் காங்கிரஸ் உறுப்பினர் பேசினார். சேலத்து உறுப்பினர் என்பதால் எனக்குக் கோபம். ஏனென்றால் நாவலரைத் தோற்கடித்த மாவட்டம் அது. அவருடைய பெயர் மாரியப்பன். 200 வாக்குகள்

வித்தியாசத்திலே நாவலர் தோற்ற இடம். இலக்கிய சர்ச்சை ஒருநாள் பேச்சிலே வந்தபோது, மாரியப்பன் அன்றைக்கு எங்களுக்குப் பதில் சொல்வதாக கருதிக்கொண்டு - அவருக்கு லகர, ளகரம் அவ்வளவாக வராது - திருவள்ளுவரை எடுத்துக் கொல்லுங்கள், கம்பரை எடுத்துக் கொல்லுங்கள் என்றார் - நான் அதுதான் சமயம் என்று பார்த்து, அவர் மீதுள்ள கோபத்தில், "அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பலாத்காரமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா? இது பார்லிமெண்டரி வார்த்தையா" என்று கேட்டேன்.

உடனே பேரவைத் தலைவர் கிருஷ்ணாராவ், "நோ, நோ, மிஸ்டர் மாரியப்பன் ஜாக்கிரதையா பேசுங்க, பலாத்காரத்தைத் தூண்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி). இப்படியெல்லாம் நடைபெற்ற வேடிக்கைகளை, விளையாட்டுகளை, தமாஷ்களையெல்லாம் நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். அதே நேரத்தில் - அவர்கள் எல்லாம் இல்லையே என்றும் நினைக்கிறேன்.

அண்ணா இல்லையே என்பதுதான் எனக்கு பெருங்கவலை

பேராசிரியர் பேசும்போது சொன்னார். (கலங்குதல்). இதையெல்லாம் பார்க்க, ரசிக்க, மகிழ அண்ணா இல்லையே என்றார். (கண்களைத் துடைத்துக் கொள்ளுதல்). அம்மா இல்லையே என்ற கவலையை விட, அண்ணா இல்லையே என்பதுதான் எனக்கு பெருங்கவலை என்பதை அவர்களும் அறிவார்கள், எல்லோரும் அறிவார்கள். ஆனால் எல்லா கவலைகளையும் போக்குகின்ற அளவிற்கு அந்தக் கவலையை யெல்லாம் தீர்க்கின்ற அளவிற்கு, அதற்கெல்லாம் பரிகாரமாக நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள் என்ற ஒரேயொரு ஆறுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) உங்களோடு நான் இருக்கிறேன் - நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கிறேன் - நாமனைவரும் சேர்ந்து இந்த நாட்டை வாழவைக்க - இந்தச் சமுதாயத்தை முன்னேற்ற - பாடுபட - இன்றைக்கு சூளுரை மேற்கொள்வோம் - அதுதான் இந்த நாளில் நீங்கள் என்னைப் பாராட்டி, ஊக்கப்படுத்திய இந்த விழாவில் நான் எடுத்துக் கொள்கிற சூளுரை என்று குறிப்பிட்டு இந்தச் சூளுரையையே என்னுடைய ஏற்புரையாகக் கருத வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் அமைகிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



இந்த நாள் கோரிக்கை

2

சென்னை தீவுத் திடலில் 11.5.2007 அன்று மாலை நடைபெற்ற சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா பொதுக்கூட்டத்தில் கடலெனத் திரண்ட மக்கள் கடலிடையே முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"ஐம்பதாண்டுகள் சட்டமன்றப்பணியை நிறைவு செய்துள்ள இந்நாளில் அந்த ஐம்பதாண்டு காலப் பணியை பொன்விழா காலம் என புனைந்துரைத்து, எனைப் புகழ்ந்து பாராட்ட வருகை தந்துள்ள தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ அலுவல்களுக்கிடையே நம்முடைய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களும் இந்த விழாவிற்கு வருகை தந்திருப்பது அவர்களுக்கும் எனக்கும் உள்ள சகோதர பாசத்தை, குடும்பப் பாசத்தை விளக்குகின்ற ஒன்றாக நான் கருதுகிறேன்.

அவர்கள் என்பால் கொண்டிருக்கின்ற அன்பு, பாசம் இவைகளின் அடையாளந்தான் எத்தனையோ அலுவல்களுக் கிடையே - எத்தனையோ நிலைமைகளுக்கிடையே அவைகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இன்றைக்கு இந்த விழாவிற்கு வருகை தந்திருப்பதாகும்.

நான் இது போன்ற விழாக்களில் கலந்து கொள்ளக்கூடிய நிலையில் ஒருமுறை நெல்லைச் சீமையிலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்ட ஒரு தேர்தலிலே பணியாற்றி, தேர்தல் முடிவு எனக்கு - நான் ஆற்றிய பணிகளுக்கு மாறாக - தி.மு.க.விற்கு வெற்றி கிட்டாமல் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். திரும்புகின்ற வழியில் மதுரை மாநகரிலே

அந்நாள் நண்பர் மதுரை முத்து அவர்கள் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து என்னை அங்கே பேசுமாறு சொன்னார். நான் தயங்கினேன். காரணம்; நெல்லையில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலிலே வெற்றி பெறமுடியாமல் சென்னை திரும்புகின்ற எனக்கு இங்கே விழா ஏன், வேண்டாம் என்று சொன்னேன். இருந்தாலும் அவர்கள் பிடிவாதமாக அங்கே என்னைப் பேச வைத்தாகள்.

நான் பேசும்போது குறிப்பிட்டேன் - நான் இங்கே பேசுவது எப்படியிருக்கிறதென்றால் - திருக்குறளை நினைவு படுத்துவதாக இருக்கிறது. திருக்குறளில் ஒரு குறள் உண்டு -

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்."

என்பது குறள். போர்க்களத்தில் தன்னுடைய கைவேலை எறியும்போது, அது ஒரு யானையின் மீது குத்திக்கொண்டு, அந்த வேல் கையை விட்டுப் பறிபோய் யானையும் ஓடி விட - வேலும் கையைவிட்டு நழுவி விட - வேறு என்ன செய்வதென்று அவன் விழித்த நேரத்தில், அவனுடைய உடலிலேயே ஒரு வேல் தைத்திருப்பதை அப்போதுதான் அவன் உணர்ந்து, உடலில் தைத்த வேலைப் பிடுங்கிப் போரிட்டான் - அதுபோலத்தான் கைவேல் களிற்றொடு போக்கி வருகின்ற எனக்கு, மெய் வேல் பறியா நகும் என்ற குறள் போல் எதிர்காலத்தில் ஒரு மெய் வேல் கிடைக்கும், அதை வைத்துப் போர் புரிவேன் என்று நான் குறிப்பிட்டேன். (கைதட்டல்.)

எதிர்காலத்திலே நாம் வெற்றிகளை பெறத்தக்க வேல்கள் நிச்சயம் நமக்குக் கிடைக்கும்

சற்றொப்ப நம்முடைய சகோதரியார் திருமதி. சோனியா காந்தி அவர்களும் அந்த நிலையில் இப்போது இங்கே இந்த விழாவிலே என்னைப் பாராட்ட வந்திருக்கிறார்கள். (பலத்த கைதட்டல்). கைவேல் களிற்றொடு போக்கி வந்தாலும், மெய்வேல் பறியா நகும் என்ற குறளுக்கேற்ப எதிர்காலத்தில் நாம் வெற்றிகளைப் பெறத்தக்க வேல்கள் நிச்சயமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையை வயதிலே மூத்தவன் என்ற முறையிலே வாழ்த்தாக நம்முடைய சோனியா காந்தி அவர்களுக்கு நான் வழங்க விரும்புகிறேன். (கைதட்டல்.)

இந்த நிகழ்ச்சியில் நான் என்னை அவர்கள் எல்லாம் பாராட்டி, புகழ்ந்துரைத்து, அதற்கு ஏற்புரை கூறுவது என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த குழுவினர் மிக சாமர்த்தியசாலிகள் – இந்த நிகழ்ச்சியை ஒரு கட்சியின் சார்பாக ஏற்பாடு செய்யவில்லை. அல்லது சில பேர் அங்கலாய்ப்பதைப்போல அரசின் சார்பாக ஏற்பாடு செய்யவில்லை. இந்த விழாவை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நண்பர்கள் என்னிடம் கேட்டபோது நான் வேண்டாமென்று மறுத்தேன்.

ஆனால் எல்லா கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள், சட்ட மன்றத்திலே இடம் பெற்ற கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் – காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள், புரட்சி பாரதம் என்ற எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வலியுறுத்தி ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவிற்கு நம்முடைய பேராசிரியர் அவர்களைத் தலைவராகவும், ஆர்க்காடு வீராசாமி அவர்களைப் பொருளாளராகவும், கோ.சி. மணி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், சுதர்சனம், பீட்டர் அல்போன்ஸ், கோ.க. மணி, கோவிந்தசாமி, சிவபுண்ணியம், ஆகியோரை துணைத் தலைவராகவும், செயலாளர்களாக அமைத்து, மலர்க் குழுவை பொன்முடி, எ. வ. வேலு, செல்வப் பெருந்தகை ஆகியோரைக் கொண்டு அமைத்து – இந்த விழாவினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகரம் பெரும் மக்கள் கடலை சந்தித்திருக்கிறது

இவர்கள் விழா என்றால் சட்டமன்ற ஐம்பதாவது பொன் விழாவினை சட்டமன்றத்திலேதான் நடத்துவார்கள் என்று இருந்தேன். நீ சென்னையிலே உள்ள சட்டமன்றத்தில் அல்லவா இந்த ஐம்பதாவது பொன்விழா, ஆகவே சென்னையையே விழாக்கோலமாக ஆக்குகிறோம் பார் என்று சென்னையையே விழாக்கோலமாக ஆக்கியிருக்கிறார்கள். நாம் அம்மையார் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். சென்னையில் இதே இடத்தில் தேர்தல் நேரத்தில் பிரச்சாரத்திற்காக நீங்கள் வந்தீர்கள், இதே மைதானத்தில்தான் பேசினீர்கள், ஆனால் இப்போது இந்த

மைதானம் விரிவடைந்திருக்கிறது. நம்முடைய கூட்டணி எப்படி தமிழகத்திலே விரிவடைந்திருக்கிறதோ, அதைப்போல இந்த மைதானம் விரிவடைந்திருக்கிறது. (பலத்த கைதட்டல்.)

அதனால்தான் அன்றைக்கு நீங்கள் பார்த்த மக்களைவிட, நான்கு மடங்கு அதிகமாக மக்களை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள். இங்கே கூடியிருக்கின்ற மக்களைவிட கடற்கரை சாலையில் காந்தி சிலை வரையில் மக்கள் கூடியிருப்பதை வரும்போதே நான் பார்த்தேன் என்றால், போகும்போது இன்னும் எவ்வளவு பேர் இருப்பார்களோ சொல்ல முடியாது. அவ்வளவு பெரும் மக்கள் கடலை சென்னை மாநகரம் சந்தித்திருப்பதற்கு இந்தக் குழுவினரும், இந்தக் குழுவிலே இன்றைக்கு தளநாயகனாக இருந்து பாடுபட்ட வீராசாமி போன்றோரும் முக்கியமான காரணம் என்பதைக் கூறி, அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே வந்த இடத்தில் - என்னை வாழ்த்த வந்த இடத்தில் - அம்மையார் அவர்கள் எனக்குச் சால்வை அணிவித்து, கேடயமும் கொடுத்து தன்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்கள். இது போதாது (பலத்த சிரிப்பு). நான் சால்வையை மாத்திரம் பெற்று அதனால் திருப்தி அடையக் கூடியவனல்ல. (பலத்த கைதட்டல்.) நான் ஐம்பதாண்டு காலம் சட்ட மன்றத்திலே பணியாற்றினேன் என்றால், ஏன் இன்றைக்கு என்னைப் புகழ்கிறார்கள் என்று சொன்னால், நான் எனக்காக அல்ல - எனக்கு சால்வை கிடைக்கும் என்பதற்காக அல்ல - பல பிரச்சினைகளை தமிழகத்திலே "சால்வ்" (Solve) செய்வீர்கள் என்பதற்காகத்தான் நான் சட்டமன்றத்திலே பணியாற்றினேன். இன்றைக்கும் இந்தக் கூட்டத்திலே என்னுடைய நன்றியுரையாக சிலவற்றை நம்முடைய பிரதமர் அவர்களுக்கும், அம்மையார் அவர்களுக்கும் இங்கே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க துணை நிற்க வேண்டும்

தமிழ்நாட்டின் மூன்று பக்கமும் எதிரிகளை அல்ல - நண்பர்களாக அல்லாதவர்களைப் பெற்றிருக்கின்ற மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் மேற்கே எடுத்துக் கொண்டால் கர்நாடகம், காவேரிப் பிரச்சினை. அங்கிருந்து வடக்கே எடுத்துக் கொண்டால் ஆந்திரம், பாலாற்றுப் பிரச்சினை. தெற்கே எடுத்துக் கொண்டால் கேரளா, முல்லைப் பெரியாறு பிரச்சினை. இப்படி மூன்று

பக்கத்திலும் பிரச்சினைக்கிடையே ஒரு தீபகற்ப நிலையிலே அரசியலிலே நாங்கள் இருக்கிறோம். இதை எங்களால் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஐம்பதாண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றினேன். ஐம்பதாண்டு காலம் குரல் கொடுத்தேன், ஆட்சிப் பொறுப்பிலே சில ஆண்டு காலம் இருந்தேன், அந்தக் காலங்களில் எல்லாம் சட்டமன்றத்திலே உள்ள எல்லாக் கட்சிகளின் துணையோடு, ஒத்துழைப்போடு பல தீர்மானங்களை நிறைவேற்றினோம்.

காவேரிப் பிரச்சினைக்காக இந்த ஐம்பதாண்டு காலத்தில் நான் மாத்திரம் கர்நாடகத்தைச் சேர்ந்த 11 முதலமைச்சர்களோடு பேசியிருக்கிறேன். அதைப்போல நான்கைந்து மத்திய அமைச்சர்களோடு பேசியிருக்கிறேன். இன்னும் பிரச்சினை தீரவில்லை. நடுவர் மன்றத்திற்கு பிறகாவது தீரும் என்று பார்த்தால் இன்னும் தீரவில்லை. அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும் அக்கறையும் உங்களுக்கு உண்டு என்பதற்காக அதை நான் இந்தப் பொதுமக்கள் மத்தியிலே உங்கள் வசமே ஒப்படைக்கிறேன்.

ஒப்படைத்துவிட்டு நாங்கள் வாளாவிருக்க மாட்டோம். உங்களுக்குப் பக்கப் பலமாக இருந்து அதை தீர்த்து வைப்பதற்கு நாங்களும் துணை நிற்போம், நீங்களும் எங்களுக்கு துணை நிற்கவேண்டும் என்பதை இந்த ஐம்பதாண்டு பொன்விழாவிலே மத்திய அரசைப் பார்த்து, நம்முடைய பிரதமரைப் பார்த்து, அம்மையார் சோனியா காந்தி அவர்களைப் பார்த்து நான் வைக்கின்ற வேண்டுகோளாக அவர்கள் பாவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, சட்டப் பேரவையிலே பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம் – இந்த ஐம்பதாண்டு காலத்திலும் சரி, இடையிலே பத்தாண்டு காலம் அல்லது ஐந்தாண்டு காலத்திலும் சரி, அதிலே மிக முக்கியமான தீர்மானம் 33 சதவிகிதம் மகளிருக்கு இட ஒதுக்கீடு. அந்தத் தீர்மானமும் இன்னும் செயல்படவில்லை, செயலாக்கம் பெறவில்லை. அதையும் இன்றைக்கு உங்களுடைய காதுகளிலே போட்டு வைக்கிறேன். உங்கள் இதயத்திலே அதைப் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

27 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு ஆபத்து வராமல் காப்பாற்றிட வேண்டும்

அதைப் போல 27 சதவிகிதம் இட ஒதுக்கீடும் – எவ்வளவு அந்தரத்திலே, திரிசங்கு சொர்க்கத்திலே நிற்கிறது.

அந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு மேலும் ஆபத்து வந்து விடாமல் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மத்தியிலே வீற்றிருக்கின்ற நம்முடைய பிரதமரையும், அம்மையார் அவர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.


அதைப்போலவே சிறுபான்மையோர் இட ஒதுக்கீடு - அது சட்டமாக வரும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையோர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வந்தால் என்ன ஆகும் என்ற கேள்விக் குறியும் கூடவே நின்று கொண்டிருக்கின்றது. அந்தக் கேள்விக் குறிக்கு இடம் இல்லாமல், பாதுகாப்போடு சிறுபான்மை சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக எப்படி இட ஒதுக்கீடு தருகிறோமோ, அந்த இட ஒதுக்கீடு சட்டத்திற்குப் பாதுகாப்பாக வழிவகை வகுக்கவேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

நதிகளை இணைக்கின்ற முயற்சிக்கு அடிக்கல் நாட்டுங்கள்

இந்தப் பொன்விழாவில் நான் எதையும் உங்களிடம் பரிசாகக் கேட்கவில்லை. இவைகளைத்தான் பரிசாகக் கேட்கிறேன். இந்தப் பரிசுகளை எனக்காக அல்ல, என்னுடைய நாட்டு மக்களுக்காக, இந்தியாவிலே இன்று இந்த நதி நீர் பிரச்சினை தீரவேண்டுமேயானால் - நதிகளின் இணைப்பு ஒன்றுதான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும். நதிகளை இணைத்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினைகள் தீரும்.

அதற்கு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். என் பொன்விழா நினைவாக - என் மீது நீங்கள் வைத்திருக்கின்ற அன்பின் அடையாளமாக - இந்தப் பொன்விழா நினைவாக நதிகளை இணைக்கின்ற முயற்சிக்கு அடிக்கல் நாட்டுங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, உங்களுடைய அன்பான வருகைக்கு என்னுடைய தலை தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியையும் உங்களுக்குத் தெரிவித்து, வந்து கூடியிருக்கின்ற பொது மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும், என்னை வாழ்த்திய தலைவர் பெருமக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் விடைபெறுகிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



சட்டங்களும்! திட்டங்களும்!

3

‘சட்டப் பேரவையில் கலைஞர் பொன்விழா’ இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 12.5.2007 அன்று சட்டப் பேரவையில் மக்களவைத் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் பங்கேற்று முதர்வர் கலைஞரின் சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்.

நிறைவாக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும் போது,

“சட்டப்பேரவையில் நான் ஆற்றிய பணிகளுக்கான பொன்விழா நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வந்துள்ள நாடாளுமன்றத்தின் மதிப்புமிகு அவைத் தலைவர், அமைதியை உருவாக்கும் தலைவர் (சிரிப்பு), அமளிகளை அடக்கும் தலைவர் (பலத்த சிரிப்பு) திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்களே,

வரவேற்புரையாற்றிய தமிழக சட்டப்பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் அவர்களே,

அவை முன்னவர் அன்புக்கினிய ஆருயிர் சகோதரர், பேராசிரியப் பெருந்தகை அன்பழகனார் அவர்களே,

ஆந்திர மாநிலச் சட்டப்பேரவை தலைவரவர்களே, புதுவை மாநிலச் சட்டப்பேரவைத் தலைவரவர்களே,

வருகை தந்துள்ள மத்திய - மாநில அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் உங்களுடைய காலடிகளிலே குவிக்கின்றேன்.

இந்த இனிய விழாவை மணமிக்க விழாவை எழில் பொதிந்த விழவை கடந்த இரண்டு நாட்களாக நடத்துவதற்கான

ஏற்பாடுகளைச் செய்து நான் முதலிலே தடுத்தும்கூட, என்னை ஓரந்தள்ளிவிட்டு, ஒப்பற்ற முறையில் இந்தப் பொன் விழாவை நடத்தியே தீருவோம் என்று என்னிடத்திலே சூளுரைத்து, நடத்திய பிறகு சொல்லுங்கள், எப்படி நடத்தினோம் என்று - என்னிடத்திலே அறை கூவல் விடுத்து - அந்த அறைகூவலிலே வெற்றி பெற்றிருக்கின்ற விழாக் குழுவினர்களான - விழாக் குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களே, ஆர்க்காடு வீராசாமி அவர்களே, சுதர்சனம் அவர்களே, ஜி.கே. மணி அவர்களே, பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, கோ.சி. மணி அவர்களே, வீரபாண்டி ஆறுமுகம் அவர்களே, துரைமுருகன் அவர்களே, சி. கோவிந்தசாமி அவர்களே, சிவபுண்ணியம் அவர்களே, மலர் குழுவிற்குப் பொறுப்பேற்று அதை மகத்தான முறையில் வெளியிட்டு, வழங்கியுள்ள பொன்முடி அவர்களே, எ. வ. வேலு அவர்களே, செல்வப் பெருந்தகை அவர்களே, வெளிப்புறத்திலும், நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கும் ஏற்பாடுகளைக் கவனித்து, பாழ்பட்டுக் கிடந்த அந்த நிலத்தை பசுமை நிறைந்த ஒரு இடமாக மாற்றியமைத்துள்ள வடசென்னை பலராமன் அவர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாச உணர்வோடு, கொள்ளை உணர்வோடு என்னை வாழ்த்தியிருக்கிறார்

நம்முடைய நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர், சாட்டர்ஜி அவர்கள் நான் எந்த அளவிற்கு இந்த மாமன்றத்திலே பணியாற்றியிருக்கிறேன் - இந்த மாமன்றத்தை ஒரு பாசறையாக் கொண்டு எந்த அளவிற்கு தமிழ் நிலத்திலே தொண்டு தொடர்ந்திருக்கிறேன். இந்த ஐம்பதாண்டு காலம் என்பதை அவருக்கே உரிய பாச உணர்வோடு, அவருக்கே உரிய கொள்கை உறுதியோடு இங்கே எடுத்துச் சொல்லி என்னை வாழ்த்தியிருக்கிறார்கள்.

நேற்றைய தினம் இந்திய அரசின் காவலர்களாக உள்ள பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும், அங்கே நடைபெறுகின்ற அரசுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களும் என்னைப் பொதுக்

கூட்டத்திலே பல பட வாழ்த்திப் பாராட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் சட்டமன்றத்திலே ஆளுநர் ஒருநாள் அமர்ந்து உங்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டியது போதாது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலோ என்னவோ இந்தியாவே நாடாளுமன்றமே வாழ்த்துகிறது - சட்டமன்றம் இங்கிருந்து வாழ்த்தியது, நாடாளுமன்றம் வந்து வாழ்த்தியது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையிலே நம்முடைய பெருந்தகை சாட்டர்ஜி அவர்கள் என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். நான் ஏன் என்னால் இயன்ற அளவிற்கு என்னுடைய அமைச்சரவை சகாக்களை துணை கொண்டு இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த எல்லா கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணை கொண்டு ஆற்றிய காரியங்களை நான் ஆற்றியதாகவே இங்கே என்னைச் சிறப்பிப்பதற்காக இந்த ஐம்பதாண்டு காலத்திலே ஆற்றினேன் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும்கூட, பொன் விழா நடைபெறுகிறது, இவைகளையாவது சொல்லித்தானே ஆகவேண்டுமென்ற முறையிலே சொல்கிறான் என்ற அளவிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், ஆமாம், நான்தான் இந்தக் காரியங்களை ஆற்றினேன். வேறு யாரால் இவைகளை ஆற்ற முடியும் என்று சொல்கின்ற வீம்பு, வீறாப்பு, ஆணவம், அகம்பாவம் எனக்கு ஏற்பட்டதும் இல்லை, ஏற்படப்போவதும் இல்லை. அதற்குக் காரணம் என்னை ஆளாக்கிய தந்தை பெரியாரும், வழி நடத்திய பேரறிஞர் அண்ணாவும் அந்தப் பாடத்தை எனக்குக் கற்றுத் தரவில்லை. எனவே அவர்களுடைய வழியில் ஐம்பதாண்டு காலம் சட்டமன்றப் பொது வாழ்க்கையை நான் நடத்தியிருக்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலேதான் சுயமரியாதை திருமணச் சட்டம் உருவாயிற்று. சுயமரியாதை திருமணங்கள் பல ஆண்டு காலம் சட்ட ரீதியாக நடைபெறாவிட்டாலும், தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையை, அவருடைய ஆணைக்கிணங்க சுயமரியாதைக்காரர்கள் தங்களுடைய வீடுகளிலே திருமணங்களை சுயமரியாதை முறையிலே நடத்திக் கொண்டார்கள் என்றாலும்கூட, அதற்கு நான் சட்ட சம்மதம் பெற்றுத் தருகிறேன் என்று சபதம் செய்து ஆட்சியைக் கைப்பற்றி இந்த ஆட்சிப் பொறுப்பில் வந்து அமர்ந்த அண்ணா அவர்கள் சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட வடிவம் தந்ததும் இந்த

அவையிலேதான் என்பதை நான் சாட்டர்ஜி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நான் ஏன் இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால் - தம்பி டி. ஆர். பாலு அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு சாட்டர்ஜி அவர்கள் ஒருமுறை வந்தபோது இது பற்றிக் கூறியிருக்கிறேன். இப்படி இந்தத் திருமணம் மாத்திரம் சுயமரியாதை திருமணம் அல்ல, இதுபோல இந்தியா முழுவதும் நடைபெற வேண்டும், சுயமரியாதைக் கொள்கையின்படி நடைபெறுகின்ற இந்தச் சீர்திருத்தத் திருமணங்கள் அகில இந்திய அளவிலே நடைபெறுவதற்கு தாங்கள் வழிசெய்ய வேண்டுமென்று நான் நம்முடைய சாட்டர்ஜி அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மறந்திருக்க மாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். எனவேதான் ஒருவேளை மறந்திருந்தால் அதை நடத்துவதற்கு அவர்கள் துண்டுகோலாக அமைவார்கள் என்று இங்கே நான் இந்த அவையிலே இந்தப் பாராட்டு விழாவிலே நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேதான் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டது. ஏற்கனவே தமிழ்நாடு காங்கிரஸ் என்று இருந்தாலும்கூட, அச்சடிக்கப்பட்ட புத்தங்களிலே தமிழ்நாடு அரசு என்று இருந்தாலும்கூட, நாட்டிற்கு இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயரிடப்படவில்லை. இதற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற கோரிக்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே நிறைவேற்றி - நிறைவேற்றியது மாத்திரமல்ல; அவரே ஒரு தொண்டரைப்போல நின்று கொண்டு - முதலமைச்சராக அல்ல - நான் தமிழ்நாடு என்பேன், எல்லோரும் வாழ்க என்று கூற வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக் கொண்டு - அவர் தமிழ்நாடு என்று கூற எல்லோரும் வாழ்க வாழ்க என்று ஒலித்த மாமன்றமும் இந்த மாமன்றம்தான்.

அதைப்போலவே இரு மொழித் திட்டம் - இனி ஆதிக்க மொழிகளுக்கு இடமில்லை, ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டு மொழிகளுக்குத்தான் இடம், ஆதிக்க மொழிகள், கட்டாய மொழிகள் நம்மீது எதுவும் திணிக்கப்பட மாட்டாது என்பதற்கு அறிகுறியாக இருமொழித் திட்டத்தை நிறைவேற்றியதும் இந்த மாமன்றத்திலேதான்.

நான் நேற்றைக்கு கவர்னர் அவர்களுடைய தலைமையிலே இந்த விழாவிலே பேசும்போது சொன்னேன்.

இந்த அவையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், உருக்கமான நிகழ்ச்சிகள், வேடிக்கையான நிகழ்ச்சிகள், தமாஷான நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் என்று இவைகளைப் பற்றியெல்லாம் நேற்று நான் விசாரித்தேன். இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் சொன்னால், இந்த மாமன்றத்தினுடைய மகிமை, பெருமை தெரியும், தெரிய வேண்டுமென்பதற்காக அவைகளை யெல்லாம் சொல்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்க முதல் தடவையாக இந்தியாவிலே இந்த மாமன்றத்திலேதான் - தமிழ்நாட்டிலேதான் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மின்சார விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று சூளுரைத்து அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு தருவதற்கான திட்டம் இங்கேதான் வகுக்கப்பட்டது. இரண்டு அல்லது மூன்று இலட்சம் மக்களுக்கு குடியிருப்பு மனை - அவர்கள் இருக்கின்ற குடியிருப்புக்கான மனை எந்த நேரத்திலும் முதலாளி பார்த்து, மிராசுதாரர் பார்த்து, பிரித்துக் கொண்டு போ என்று சொன்னால், பிரித்துக் கொண்டு போகவேண்டிய தற்காலிக நிலையில் இல்லாமல், யார் சொன்னாலும் அது அவர்களுக்கான சொந்த மனை தான் என்று குடியிருப்பு மனை, குடியிருப்போருக்கே சொந்தம் என்று விவசாயத் தொழிலாளிகளுக்காக ஆக்கியதும் இந்தச் சட்டமன்றத்திலேதான்.

அதைப்போல தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல - கை ரிக்ஷாக்களை ஒழித்து அதற்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கியதும், அதற்கான திட்டம் தீட்டப்பட்டதும் இந்த மாமன்றத்திலே தான்.

நில உச்ச வரம்பு சட்டம் - பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே கொண்டு வந்த சட்டம் - 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம் - அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கி அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய இடமும் இந்த இடம்தான்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இஸ்லாமிய மக்களையும் இணைக்க வேண்டும் என்று குரல் எழுந்ததும், இங்கேதான். அப்படி குரல் எழுந்தபோது, அதற்கு சட்டத்திலே இடம் இல்லை என்று ஒரு அமைச்சர், என்

தலைமையிலே இருந்த ஒரு அமைச்சர் உண்மை நிலையை எடுத்துச் சொன்னபோது, இஸ்லாமிய நண்பர்கள், உறுப்பினர்கள் சோர்ந்து உட்கார்ந்தபோது, சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொல்லி அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்ட பிரிவிலே சேர்த்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

பெரியாரின் கொள்கையாக சமத்துவக் கொள்கையை நிறைவேற்ற பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறைவேற்றுவதற்கு வழிவகுத்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உருது அகாடமி உருவாக்கியதும் இந்த மாமன்றத்திலேதான்.

உழவர் சந்தை திட்டம் உருவானதும் இந்த மாமன்றத்திலேதான்.

இது மாத்திரமல்ல. புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கிடைக்கும் என்று சட்டம் செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஆணை பிறப்பித்து தந்தை பெரியாருடைய நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றுவதற்கு செய்த ஏற்பாடும் இந்த மாமன்றத்திலேதான்.

மத மாற்றத் தடைச் சட்டத்தை ரத்து செய்து சட்டம் கொண்டுவந்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு - விவசாயத் தொழில் புரிகின்ற இல்லங்களிலே வாடிக்கொண்டிருக்கின்ற ஏழைப் பெண்களுக்கு - தாய்மார்களுக்கு இந்த அரசு என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்பதற்கு அடையாளமாக அவர்கள் கருவுற்றால் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம், குழந்தை பிறப்பதற்கு முன்பு மூன்று மாதங்களுக்கும், குழந்தை பிறந்த பிறகு மூன்று மாதங்களுக்கும் மொத்தம் ஆறாயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

இந்த மன்றத்திலே நான் நுழைந்தபோது என்னைப் பார்த்து சிரித்து வரவேற்ற முதலமைச்சராக இங்கே உட்கார்ந்திருந்த பெருந்தலைவர் காமராசர் - அந்தப் பெருந்தலைவர் காமராசரிடத்திலே எனக்கு சில நேரங்களிலே, பல நேரங்களிலே கொள்கை ரீதியாக, அரசியல் நடப்பு ரீதியாக பல வேறுபாடுகள் ஏற்பட்டாலும் கூட, வணக்கத்திற்குரியவர், போற்றுதலுக்கு உரியவர், பின்பற்றுவதற்கு உரியவர் என்ற நிலையிலே அவருடைய புகழ் மேலும் மேலும் பரவிட வேண்டும் என்பதற்காக காமராஜர் பிறந்த நாள் ஜூலை 15ஆம் தேதியை - அவருடைய பிறந்த நாளை சட்டப்பூர்வமாக எல்லா பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும், கல்விக் கண் திறந்த காமராசருடைய பிறந்த நாளை கொண்டாட வேண்டுமென்று அறிவித்து, அறிவித்த பிறகு இடைக் காலத்திலே அது கிடப்பிலே போடப்பட்டு - இது சாதாரண அறிவிப்பாக இருப்பதால்தானே, இடையிலே வருபவர்கள் கைவிட்டு விடுகிறார்கள் என்று இதனை சட்டமாகவே ஆக்குகிறேன் என்று இனி ஜூலை 15, காமராசர் பிறந்த நாள், சட்டப்படி கல்விக் கண் திறந்த நாள் என்று சட்டம் நிறைவேற்றப்பட்ட இடமும் இந்த மாமன்றம்தான்.

எனவே இந்த மாமன்றத்தின் வரலாற்றிலே இப்படிப்பட்ட பல அத்தியாயங்கள் - சீர்திருத்த அத்தியாயங்கள் - புரட்சிகரமான அத்தியாயங்கள் - நாட்டை முன்னேற்ற வேண்டிய அத்தியாயங்கள் - பலப்படுத்தக்கூடிய அத்தியாயங்கள். அனைத்தும் நிறைவேறியிருக்கின்றன. அதற்கெல்லாம் ஒரு பெருமையாக இன்றைக்கு நம்முடைய பார் புகழும் பாராளுமன்றத்தில் வீற்று இவருக்கு நிகராக இன்னொருவர் இருக்கிறாரா கொள்கை உறுதியில் என்ற கேள்விக்கே இடமில்லாத அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற நம்முடைய சாட்டர்ஜி அவர்கள் இந்த விழாவிலே கலந்து கொண்டு என்னை வாழ்த்துவதும் ஒரு வரலாறுதான்.

அழைப்புக்கிணங்கி அமைச்சர் பெருமக்கள், மத்தியிலே உள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் வந்து குழுமியிருக்கிறீர்கள். நீங்கள் அமர்ந்திருக்கின்ற இடங்களைப் பார்க்கின்றேன்.

உங்களுக்கு இடம் போதுமானதாக இல்லை என்பது புரிகிறது. என்ன இன்னமும் இவ்வளவு சிறிய இடம்தானே இருக்கிறது. பொன்விழா கொண்டாடிய பிறகுகூட பெரிய இடம் வேண்டாமா என்று உங்களில் பலர் எண்ணுவது எனக்குப் புரிகிறது. ஆகவே சட்டமன்றத்திலே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் விடுத்த வேண்டுகோளை இன்றைக்குத் தொகுத்து, பொன் விழாநாள் அறிவிப்பாக ஒரு புதிய சட்டமன்றக் கட்டிடம் விரைவில் (மேசையைத் தட்டும் ஒலி) பழைமையைப் பாதுகாப்போம், புதுமையை நாடுவோம் என்ற அந்த மொழிக்கேற்ப வெகு விரைவிலே அதற்கான அடிக்கல் நாட்டப்படும் என்பதையும் அது எந்தக் கல்விக்கூடங்களையும் இடித்தோ (பலத்த சிரிப்பொலி) எந்தப் பல்கலைக் கழகங்களையும் பாழ்படுத்தியோ இல்லாமல் தனியாக ஒரு இடத்தில், பரவாயில்லை, நல்ல இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று எல்லோரும் சொல்லத்தக்க அளவிற்கு அந்த இடம் விரைவில் அமையும். அதனுடைய திறப்பு விழாவும் நடைபெற்று, நாமெல்லாம் அங்கே அமர்ந்து இன்னொரு விழா நடத்த (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி நடைபெறும்போதே அந்த இனிய வாய்ப்பு உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கூறி, என்னை நம்முடைய பெரியவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் வாழ்த்தியதன் மூலம் எனக்கு அளித்துள்ள ஊக்கத்திற்கு, உற்சாகத்திற்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை அவருக்கு காணிக்கையாக்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



ஒற்றுமை; ஒருமைப்பாடு!

4 சட்டப் பேரவையில் 14.5.2007 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள், முல்லைப் பெரியாறு, காவிரி, பாலாறு பிரச்சினைகள் பற்றி உரையாற்றினார்.

"ஞானசேகரன் அவர்களுடைய பெயர் மாத்திரம் அல்ல, அவருடைய பெயரால் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வைத்துள்ள கோரிக்கையை ஏற்பது பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். (சிரிப்பு.) இங்கு நம்முடைய இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. இந்த நாளில் நம்முடைய தமிழ்நாட்டின் தேவைகள் குறித்தும், மக்கள் பிரச்சினைகள் குறித்தும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் மிக ஆர்வத்தோடும், அக்கறையோடும் எடுத்து வைத்த வாதங்களை, தொடுத்த வினாக்களை எப்படி எதிர்கொள்வது எவ்வகையிலே இதற்கு வழிவகை காண்பது என்பதைப்பற்றி யெல்லாம் நான் உங்களிடத்திலே எடுத்துரைக்க முடியாத நிலையிலே இருக்கின்றேன்.

ஏனென்றால், இந்தப் பிரச்சினை – ஏதோ சொல்வார்களே கிராமத்தில் – 'மூக்கு உள்ள வரையிலே சளி இருந்ததுதான் தீரும் என்று' – அதைப்போல நம்முடைய மாநிலத்தைச் சுற்றியிருக்கின்ற மாநிலங்கள் அவர்கள் உயரத்திலேயிருக்கின்ற காரணத்தினால் தாழ்வான பகுதியிலே இருக்கிற நம்மை எந்த வகையிலும் கொடுமைப்படுத்தலாம் என்ற முறையில் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு இனிமேல் பேச்சுவார்த்தை, பேச்சு

வார்த்தை என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசினார் - எத்தனை தடவை பேச்சுவார்த்தை என்பது நமக்கே அலுத்துவிட்டது.

ஒருமைப்பாட்டைக் காக்க மற்ற மாநிலங்கள் ஒத்துழைக்க வேண்டும்

காவிரிப் பிரச்சினையில் நான் 1968ஆம் ஆண்டு பேசத் தொடங்கியவன். இதுவரையிலேயும் பேசி இப்போதும் வந்த இறுதித் தீர்ப்புகூட இறுதியான தீர்ப்பா என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். எப்படி என்றால், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டில் மூன்று மாநிலத்திலே உள்ள மக்களுக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். ஒரு காலத்திலே, நாட்டுப் பிரிவினை கேட்ட நாங்களே அதை தூக்கி தூர எறிந்து விட்டு ஒருமைப்பாட்டிலே இருந்த நம்பிக்கையை வலியுறுத்தி இன்றைக்கு நிலைநாட்ட நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திராவிட நாடு பிரிவினையை அறிஞர் அண்ணா அவர்கள் கைவிட்டபோது பிரிவினைக்காக நாம் சொன்ன காரணங்கள் அப்படியே இருக்கின்றன. நாம் பிரிவினையை இந்தியாவின் ஒற்றுமைக்காக கைவிட்டுவிட்டோம் என்று குறிப்பிட்டார்கள்.

அதைப்போல இன்றைக்கும் நாம் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டின் மீது வைத்துள்ள நம்பிக்கை வெற்றி பெற மற்ற மாநிலங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அதற்காகத்தான் நான் இந்த ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசும்போது தெளிவாகச் சொன்னேன், திட்டவட்டமாகச் சொன்னேன் - நதிகளையெல்லாம் இணைப்பதன் மூலம்தான் மக்களுடைய பிரச்சினைகளை, ஒவ்வொரு மாநிலத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஆகவே, அதற்கு தேதி குறிக்க வேண்டும் என்று சொன்னேன். அன்றைக்கு பொன்விழாவிலேகூட நதிகள் இணைப்பைப் பற்றி நான் பொதுக்

கூட்டத்திலே பேசிவிட்டு தனியாக அம்மையார் சோனியா காந்தி அவர்களையும் பிரதமர் அவர்களையும் அவர்கள் விடைபெறுவதற்கு முன்பு சந்தித்து பேசியபோதுகூட, நதிகள் இணைப்புக்கு அடிக்கல் நாட்டப்படும் என்பதற்கான தேதியைக் குறிப்பிடுங்கள் என்றுகூட சொன்னேன். நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் டெல்லிக்கு வரும்போது அது பற்றிப் பேசலாம், விரிவாகப் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் ஒரு முறை நிச்சயமாக இந்தத் திங்களிலே டெல்லிக்குச் செல்ல இருக்கிறேன். அப்போதும் இதைப் பற்றி அவர்களிடத்திலே வலியுறுத்திப் பேசுவேன்.

தீபகற்ப நதிகளை இணைத்தாலே தாகம் தீரும்

ஏனென்றால், நதிகளை இணைப்பது என்றால் கங்கையிலிருந்து காவிரி வரையில் இணைப்பதல்ல. ஆங்காங்கு இருக்கின்ற நதிகளை, கோதாவரியிலிருந்து காவிரி வரையில் – இப்படி இங்கே இந்தத் தீபகற்பத்திற்குள்ளே இருக்கின்ற நதிகளை இணைத்தாலே, நம்முடைய தண்ணீர்த் தேவை ஓரளவு தீரும் என்பது மிக மிக உண்மையான செய்தியாகும். அதற்குத்தான் நாம் பாடுபடவேண்டும்.

இந்த காவேரிப் பிரச்சினை முன்பு தேவகவுடா அவர்கள் பிரதமராக இருந்தாரே அப்போதே தீர்ந்திருக்க வேண்டிய பிரச்சினை. நாங்கள் டெல்லியிலே இருந்தபோது நான், நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன், நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் நண்பர் வீராசாமி இவர்களெல்லாம் டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்திலே தங்கியிருந்தபோது தேவகவுடா அவர்கள் டெல்லியிலே இருந்தார்கள். அப்போது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் பட்டீல் அவர்கள் வந்தார்கள். பேச்சு வார்த்தை நடைபெற்றது. நாங்கள் தமிழ்நாடு இல்லத்திற்கு

எதிரே இருக்கின்ற கர்நாடக இல்லத்திற்கு சென்றோம். பேச்சுவார்த்தை அன்று எதிர்பார்த்ததற்கு மாறாக வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

தொடர்ந்து கையெழுத்து போடுகின்ற கட்டம் வந்தது. அந்தக் கட்டம் வந்தபோது பிரதமர் அழைக்கிறார் என்ற செய்தி வந்தது. அப்பொழுதே எங்களுக்கு திடுக்கென்றது. இந்த நேரத்திலே பிரதமர் அழைக்கிறார். அதுவும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பிரதமர். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று நினைத்துக் கொண்டோம். நினைத்தபடியே நடந்தது. அவர் அழைத்ததற்குப் பின்னால் சொன்னார் - ஒரு புது யோசனை - தமிழ்நாடும், கர்நாடகமும், மற்ற மாநிலங்களும் சுகம் பெற தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள இந்த இடைஞ்சல் அடிக்கடி வராமல் இருக்க ஒரு நல்ல யோசனை - பெரிய பிரம்மாண்டமான திட்டம் வைத்திருக்கிறேன் என்று சொன்னார். என்ன என்று கேட்டோம். அதுதான் 'மேகதாது' என்று சொன்னார்.

இந்த 'மேகதாது' ஒகேனக்கலுக்குப் பக்கத்திலே அமைந்திடுமேயானால் பெய்கிற மழைத் தண்ணீர் எல்லாம் தேங்கி அப்படித் தேக்கப்பட்டிருக்கின்ற தண்ணீரைக் கொண்டு ஆண்டு தோறும் நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்து விடலாம், அடிக்கடி இப்படி கர்நாடகத்தை நம்பியிருக்கத் தேவையில்லை - மழையை நம்பியிருக்கத் தேவையில்லை என்றெல்லாம் சொல்லி அன்று கையெழுத்திடவிருந்த அந்த நிலையை ஒத்தி வைத்தார். அதற்குப் பிறகு பேசுவது, ஒத்தி வைப்பது, இதுவே நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது பார்த்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பு என்ன ஆயிற்று என்பதும் கேள்விக்குறியாக நின்று கொண்டிருக்கிறது. இது கர்நாடகத்தைப் பொறுத்த முடிவு.

பாலாறு என்ன ஆயிற்று என்பது ஆந்திராவைப் பொறுத்தவரையிலே அதுவும் இன்றைய தினம் ஒரு தொய்விலே இருப்பதைக் காணுகின்றோம். அதைப் போலவே, முல்லைப்

பெரியாறு என்ன ஆயிற்று - அதுவும் கேரள மாநில அரசினுடைய போக்கைப் பொறுத்திருக்கிறது. இங்கே அமைச்சர் துரைமுருகன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல தண்ணீருக்கு எவ்வளவு தருவீர்கள் என்று கேட்கின்ற நிலைமை இங்கே வந்திருக்கின்றது. இதையெல்லாம் பார்க்கும்போது இனி இந்த ஒவ்வொரு மாநிலங்களுடன் பேச்சுவார்த்தைகளால் பயன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆக, மத்திய சர்க்காரும் நம்முடைய கஷ்டங்களை உணர்ந்து உடனடியாக திரும்பிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இந்திய ஒருமைப்பாட்டைக் கெடுக்கக்கூடாது.


எங்கேயாவது ஒரு தகராறு நடந்தால்தான் என்ன நடக்கிறது என்று திரும்பிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை வரும் என்று ஆகிவிட்டால் - நாம் இங்கே அமைதியாக உட்கார்ந்திருக்கும் போது ஒரு மூலையில் ஒரு சத்தம் கேட்டால் என்ன என்று திரும்பிப் பார்க்கிறோமே அதைப்போல ஒன்று நடந்தால்தான் திரும்பிப் பார்ப்பார்கள் என்றால் அப்படி இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டை கெடுக்கக்கூடாது என்று கருதுகின்ற நாம் அதைச் செய்யத் துணியவில்லை. ஆனால் அதைத் தவிர வேறு வழியில்லை என்றும் இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கிடையே ஒரு போர் என்ற சூழ்நிலை வரக்கூடாது என்றும் நான் கருதுகின்றேன். நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சொல்லு கின்றேன். அந்த நல்லெண்ணத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டு ஆந்திராவானாலும், கேரளாவானாலும், கர்நாடக மாநிலம் ஆனாலும் அவர்கள் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிற்காக, ஒற்றுமைக்காக தியாகம் செய்ய முன்வர வேண்டும். கொஞ்சம் தண்ணீரைக் கொடுப்பதால் - தமிழகம் தண்ணீர் இல்லாத பூமி - நீர் வளம், நில வளம் நிறைந்தது தமிழகம் என்று புராணங்களிலே, நாவல்களிலே எழுதியிருக்கலாம். ஆனால், இங்கே உள்ள ஒரே வளம் மனவளம்தான்.


நீர்வளம், நிலவளம் இரண்டும் இல்லாத மாநிலம் தமிழ் மாநிலம். அந்த வளத்தை இங்கே உருவாக்குவதற்கு மற்ற மாநிலங்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். "அப்படி ஒத்துழைப்பு தரமுடியாது - நாங்கள் மேலே இருப்பவர்கள், நீங்கள் கீழே இருப்பவர்கள்" என்று வருணாசிரம தருமத்தை இதிலும் அவர்கள் கடைப்பிடிப்பார்களேயானால், எதிர்காலம்தான் அதற்குப் பதில் சொல்லும். நம்முடைய கையை விட்டு எதிர்காலம் போய்விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் மற்ற மாநிலங்களிலே உள்ள அன்புக்குரிய நண்பர்களை, ஆட்சியாளர்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். மத்தியிலே உள்ளவர்கள் இதைப் பற்றி சிந்தித்து ஒரு நல்ல முடிவைக் காணவேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்




சட்டப் பேரவையில்
கலைஞர் பொன்விழா




கலைஞர்


கல
நாள் :


நாள் :